**செ. கு. எண்:44** **நாள் :19.07.2015**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 19.7.2015

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், கருவங்குடி கிராமத்தைச் சேர்ந்த திரு. சிவலிங்கம் என்பரின் மகன் கலியமூர்த்தி 25.4.2015 அன்று தன் வீட்டினருகே அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததால் மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியைும்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி வட்டம், மேட்டுப்பட்டி மஜ்ரா, குறிச்சி கிராமத்தைச் சேர்ந்த திரு. தங்கையன் என்பவரின் மகன் இந்திரஜித் 27.4.2015 அன்று வயல்வெளியில் அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததால் மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், காலங்கரைப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. பிச்சையா என்பவரின் மனைவி திருமதி சுப்புலெட்சுமி மற்றும் திரு. அழகப்ப தேவர் என்பவரின் மனைவி தங்காத்தாள் ஆகிய இருவரும் 4.5.2015 அன்று வயல் வெளியில் அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததால் மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**